HMOP.No.58/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 22.10.2025

ம.சா.1– அபர்ணாராணி த/பெ – ரெங்கராஜன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

5. திருமணம் முடிந்து சில நாட்களில் எதிர்மனுதாரர் ஊரான மாரனேரிக்கு சென்றோம் என்றால் சரிதான். திருமணத்தின் போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்கு எனது தகப்பனார் ஏற்பாடு செய்தார் என்றால் சரிதான். புகைப்படம் மற்றும் வீடியோ ஒரு பதிவு தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மாரனேரிக்கு சென்று மேற்படி புகைப்படம் மற்றும் வீடியோ காட்டினோம் என்றால் ஆல்பமாக தயாராகவில்லை, பென்டிரைவில் உள்ள பதிவுகளை போட்டு பார்த்தோம்., நான் சொல்வது போல் பென்டிரைவில் உள்ள பதிவுகளை பார்க்கவில்லை என்றும், முழுமையாக தயார் செய்யப்பட்ட வீடியோ பதிவுகளை போட்டு பார்த்தோம் என்றால் சரியல்ல.

6. மேற்படி விபரங்களை எனது பதில் உரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னிடம் மேற்படி புகைப்படம் மற்றும் வீடியோவை தங்களுக்கு ஒரு காப்பி வேண்டும் என கேட்டார்கள் என்றும், அதற்கு ரூபாய்.1,25,000/– கொடுத்தால் தான் மேற்கொண்டு காப்பி கிடைக்கும் என கூறினேன் என்றால் சரியல்ல. மாரனேரியில் இருக்கும் போது எதிர்மனுதாரரிடம் அவரது தாயார் புது டிவி வாங்கி தரும்படி கேட்ட போது நான் சம்மந்தம் இல்லாமல் அரசால் வழங்கப்பட்ட இலவச டிவி தான் உள்ளது என ஏளனமாக கூறினேன் என்றால் சரியல்ல.

7. எதிர்மனுதாரர் அனுப்பிய அறிவிப்பிற்கு நான்26.06.2020 ம் தேதி வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு ம.சா.ஆ.4 அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் எதிர்மனுதாரர் வீடு வசதி வாய்ப்புகள் குறைவாக உள்ளதால் வசதி குறைந்த இடத்தில் ஏன் திருமணம் செய்து கொடுக்கிறாய் என எனது உறவினர்கள் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் மேற்படி அறிவிப்பில் எனது உறவினர்கள் அதிகம் உள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு 100 நபர்கள் மட்டுமே உறவினர்கள் உள்ளதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தொடர்ந்து எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களை தரக்குறைவாகவும், மன உளைச்சல் ஏற்படும் படி பேசி வந்தேன் என்றால் சரியல்ல.

8. நான் எம்.பி.ஏ படித்தற்கான செலவுகளை எதிர்மனுதாரர் செய்தார் என்றால் சரியல்ல. எனது படிப்பிற்கான செலவை எனது தகப்பனார் செய்தார். நான் எம்.பி.ஏ படித்தற்கான செலவுகளுக்கான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவை எனில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது எம்.பி.ஏ படிப்பிற்கான செலவுகளை எதிர்மனுதாரர் செய்தார் என்றும், அதனால் தான் மேற்படி ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 30.12.2017 ம் தேதி எனக்கு அமெரிக்காவில் உள்ள அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வங்கியில் கடன் வாங்கி கோயம்புத்தூரில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு மாத தவணை செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். மாத தவணை மற்றும் செலவுகள் அதிகமாக உள்ளதாக கூறி ஆடம்பர செலவுகளை குறைக்க

வேண்டும் என எதிர்மனுதாரர் கூறினார் என்றும், நான் அதனை மறுத்து அமெரிக்கா முழுவதும் சுற்றி பார்க்க வேண்டும் என கூறினேன் என்றால் சரியல்ல.

9. நான் அமெரிக்காவில் வசித்த போது என் காரை உள்ளே அமர்ந்து கொண்டு உள்புறமாக பூட்டிக்கொண்டு திறக்க மறுத்ததால் போலிசார் வந்து திறக்க செய்தார்கள் என்றால் போலிசார் வந்தனர், எதிர்மனுதாரர் கத்தி சத்தம் போட்டதால் ஏதோ பிரச்சனை என பக்கத்துவீட்டுக்காரர்கள் போலிஸ்க்கு தகவல் சொல்லி போலிசார் வந்தார்கள். நான் கார் கதவை பூட்டி கொண்டு வெளியே வராததால் தான் எதிர்மனுதாரர் சத்தம் போட்டார் என்றால் சரியல்ல. நான் அமெரிக்காவில் பலசரக்கு வாங்கி கொண்டிருந்த போது எதிர்மனுதாரரை விட்டுவிட்டு நான் காரை எடுத்து கொண்டு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பொருட்களை வாங்கி கொண்டு இரண்டு கைகளிலும் அதை எடுத்து வந்த போது மீண்டும் நான் வந்து அவரை அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல.

10. அமெரிக்காவில் வசித்த போது எதிர்மனுதாரருக்கு இனப்பெருக்க விதைப்பையில் (Testicle) பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். நானும், எனது தகப்பனாரும் சிவகாசியில் உள்ள பரத் மருத்துவமனையில் சிகிச்சை எடுக்க கூறினோம் என்றால் சரியல்ல, மேற்படி மருத்துவமனையில் ஆலோசனை பெற கூறினோம். வருடாந்திர சோதனை செய்த போது எதிர்மனுதாரருக்கு இனப்பெருக்க விதைப்பையில் மேற்படி பிரச்சனை இருந்தது தெரியவந்தது. எதிர்மனுதாரர் கோயம்புத்தூரில் உள்ள சிறப்பு சீறுநீரக மருத்துவரிடம் அது குறித்து சிகிச்சை பெற சென்றார் என்றால் சரிதான். அப்போது நாங்கள் சொன்னதை கேட்காததால் எதிர்மனுதாரிடம்

போனில் அடிக்கடி சண்டை போட்டு வந்தேன் என்றால் சரியல்ல.

11. இரவு 2.30 மணியளவில் நான் போன் செய்த போது எதிர்மனுதாரர் விமான பயண களைப்பில் இருந்தார் என்றும், அதனால் தொந்தரவு செய் ய வேண்டாம் என போனை சுவிட்ச் ஆப் செய்தார் என்றால் சரியல்ல. நான் நள்ளிரவில் எதிர்மனுதாரர் தாயார் மற்றும் சகோதரிக்கு போன் செய்து சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரரை தொடர்ந்து மன ரீதியாக துன்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. 24.05.2020ம் தேதி எனது உறவினர் திருமணத்திற்காக மாரனேரியில் இருந்து மதுரைக்கு சென்றேன் என்றால் சரிதான். அப்போது கொரனோ தொற்று அதிகம் உள்ள நேரம் என்றால் சரிதான். 19.05.2020ம் தேதி எனது குழந்தையை அழைத்து கொண்டு திருமணத்திற்காக செல்ல முயன்றேன் என்றும், கொரனோ தொற்று அதிகம் இருந்ததால் எதிர்மனுதாரர் என்னை தடுத்தார் என்றால் சரியல்ல. என் குழந்தையை திருமணத்திற்கு அழைத்து செல்லவில்லை, என் வீட்டிற்கு அழைத்து சென்றேன். மேற்படி விபரத்தை எனது எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

12. நான் சிகிச்சைக்காக ஏற்காடு சென்ற தேதி ஞாபகம் இல்லை. நான் ஏற்காடுக்கு சிகிச்சைக்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், சுற்றி பார்ப்பதற்காக நானும், எனது சகோதரி மற்றும் பெற்றோர்கள் சென்றோம் என்றால் சரியல்ல. நான் முதுகு தண்டுவட பிரச்சனைக்கு சிகிச்சைக்காக ஏற்காடு சென்றேன் என்றால் எனக்கு முதுகில் வலி இருப்பதால் அது குறித்து சிகிச்சைக்காக சென்றேன், அங்கு சென்ற பின்னர் தான் முதுகுதண்டு வடத்தில் பிரச்சனை இருப்பது தெரியவந்தது. ஏற்காட்டில் நான் ஜிப் லைன், ஜப்பிங் பஞ்ச் ஆகிய விளையாட்டுகளில்

கலந்து கொண்டு அதற்கான வீடியோவை எதிர்மனுதாரருக்கு அனுப்பினேன் என்றால் வீடியோ எதுவும் அனுப்பவில்லை, ஜிப் லைன், ஜப்பிங் பஞ்ச் விளையாட்டுகளில் நான் கலந்து கொண்டேன், அப்போது எனக்கு முதுகு தண்டுவடத்தில் பிரச்சனை உள்ள விபரம் தெரியாது, அதன் பின்னர் தான் மருத்துவர் மேற்படி பிரச்சனை குறித்து கூறினார்.

13. நான் இந்தியா வரும் போது எதிர்மனுதாரர் பெற்றோர் வீட்டிற்கு செல்வதை தவிர்த்து வந்தேன் என்றால் சரியல்ல. நீண்ட காலமாக எனக்கு தோல் வியாதி இருப்பதாக கூறி எதிர்மனுதாரருடன் தாம்பத்ய உறவை தவிர்த்து வந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அழைக்க வந்த போது எனது பெற்றோர்கள் அவரை விரட்டி விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரின் பொருளாதார நிலையை மனதில் வைத்து கொண்டு அவருடன் சேர்ந்து வாழ மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களை தொடர்ந்து மன ரீதியாக துன்புறுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கோரியபடி விவாகரத்து வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.